**சுருக்கம்**

பள்ளிக் கல்வி – 2012–13ஆம் கல்வி ஆண்டில், 100 அரசு/நகராட்சி/மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துதல் மற்றும் பணியிடங்கள் தோற்றுவித்தல் – ஆணை வெளியிடப்படுகின்றது.

---

**பள்ளிக்கல்வி(மேநிக2)துறை**

அரசாணை(நிலை)எண்.137

நாள் : 08.06.2012
திருவள்ளுவராண்டு 2043
வைகாசி 26–ம் நாள்

படிக்கப்பட்டவை:–

பள்ளிக்கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண். 101930/W4/E2/11, நாள்.21.03.2012 மற்றும் 23.05.2012.

-------

**ஆணை:–**

2012–13ம் கல்வி ஆண்டில் 100 அரசு/நகராட்சி/மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்த அரசு அனுமதி அளித்து ஆணையிடுகின்றது. நிலை உயர்த்தப்படும் பள்ளிகளின் விவரம் இவ்வாணையின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

2. நிலை உயர்த்தப்படும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்வது குறித்து பின்வரும் ஆணைகள் வெளியிடப்படுகின்றன:–

(i). மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும் உயர்நிலைப்பள்ளி ஒவ்வொன்றிலும் ரூ.9300–34800 + தரஊதியம் 4600 என்ற ஊதிய விகிதத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் பணியிடத்தை ரூ.15600–39100 + தரஊதியம் ரூ.5700/– என்ற ஊதிய விகிதத்தில் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் பணியிடமாக நிலை (upgraded) உயர்த்திட ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

(ii). மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும் பள்ளி ஒவ்வொன்றிற்கும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களுக்கென ரூ.9300–34800+ தர ஊதியம் ரூ.4800 என்ற ஊதிய விகிதத்தில், 9 பணியிடங்கள் வீதம் 900 முதுநிலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் அவை நிரப்பப்படும் நாளில் இருந்து ஓராண்டு காலத்திற்கு தற்காலிகமாக ஒப்பளிப்பு செய்யப்படுகிறது:-

1. தமிழ்
2. ஆங்கிலம்
3. கணிதம்
4. இயற்பியல்

5. வேதியியல்
6. உயிரியல்
7. வரலாறு
8. பொருளியல் மற்றும்
9. வணிகவியல்

(iii) மேலே குறிப்பிடப்பட்டுள்ள பணியிடங்களில் பணியமர்த்தப்படுவோர் சம்பளம் மற்றும் ஏனைய படிகளை பெறத் தகுதியுடையவர்களாவர்.

3. பள்ளிகள் நிலை உயர்த்தப்படும் போது 1:40 என்ற ஆசிரியர்–மாணவர் விகிதம் பின்பற்றப்படுதல், நடைமுறையில் உள்ள விதிகளை நிறைவு செய்தல் ஆகியவற்றை பள்ளிக் கல்வி இயக்குநர் உறுதி செய்ய வேண்டும். தரம் உயர்த்தப்படும் பள்ளிகளில் கூடுதல் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை உருவாக்கிட சட்டமன்ற / பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி உதவியை பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளை இப்பள்ளிகள் பூர்த்தி செய்வது குறித்து கண்காணிக்க சம்பந்தப்பட்ட முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கு விரிவான ஆணைகளை வழங்கிடுமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

4. நிலை உயர்த்தப்படும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் சம்பளம் குறித்த செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.:–

i. <u>அரசுப் பள்ளிகளுக்கான கணக்குத் தலைப்பு</u>
"2202–பொதுக்கல்வி– 02 இடைநிலைக் கல்வி– 109 அரசு இடைநிலைப் பள்ளிகள்– I - திட்டத்தில் சேராதது– AA அரசு இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் மற்றும் பணியாளர்களின் சம்பளம்–
(கு.தொ.கு 2202–02–109 AA 0000)"

ii. <u>நகராட்சி, மாநகராட்சிப் பள்ளிகளுக்கான கணக்குத் தலைப்பு:–</u>
"2202–பொதுக்கல்வி – 02 இடைநிலைக் கல்வி– 109 அரசு இடைநிலைப் பள்ளிகள்– I - திட்டத்தில் சேராதது – AB நகராட்சி மற்றும் மாநகராட்சி இடைநிலை / மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்குச் சம்பளங்கள்–
(கு.தொ.கு. 2202–02–109–AB–0008)"

5. தரம் உயர்த்தப்பட்ட மற்றும் புதிதாக ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள பணியிடங்களின் சம்பளம் குறித்த செலவினம் ஒரு "புது துணைப் பணியாகக்" (New Instrument of Service)கருதப்படும். இச்செலவினம் 2012–2013 ஆம் ஆண்டுக்கான துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டு சட்டப் பேரவையின் ஒப்புதல் பெறப்படும். அவ்வாறு ஒப்புதல் பெறப்படுவதை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவு முன்பணம் மூலம் மேற்கொள்ளப்படும். எதிர்பாராச் செலவு முன்பணத்திற்கான ஒப்பளிப்பு ஆணைகள் நிதித் (வ.செ.தி.பொ–I) துறையில் வெளியிடப்படும்.

6. மேலே ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள பணியிடங்களின் சம்பளம் குறித்த செலவிற்கு தேவையான நிதியினை நிர்ணயித்து எதிர்பாராச் செலவு முன்பணம் பெற்றிட ஏதுவாக தேவையான விண்ணப்பத்தை உரிய படிவத்தில், இவ்வரசாணையின் நகலுடன் நிதித்(வ.செ.தி.பொ–I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர்

அறிவுறுத்தப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை 2012–13ம் ஆண்டிற்குரிய துணை மதிப்பீடுகளில் சேர்க்கும் பொருட்டு, உரிய விளக்கக் குறிப்பினை அரசின் நிதி(வரவு செலவு பொது–I)த்துறைக்கு அனுப்பி வைக்குமாறும் பள்ளிக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. புதிய மேல்நிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் தத்தம் பள்ளியின் தலைமை அலுவலராக (Head of Office) கருதப்படுவர். அவர்களால் அளிக்கப்படும் சம்பளம் மற்றும் இதர செலவிற்கான பட்டியல்களை சரியாக இருக்கும் நிலையில் ஏற்றுக் கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்கள் / கருவூல அலுவலர்கள் / உதவிக் கருவூல அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

8. இவ்வரசாணை நிதித்துறை அ.சா.எண்.32993/CMPC/2012, நாள்.08.06.2012ல் பெற்ற அத்துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.311(முன்னூற்று பதினொன்று)

**(ஆளுநரின் ஆணைப்படி)**

த.சபிதா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6
அரசு தேர்வுகள் இயக்குநர், சென்னை–6.
மாநகராட்சி ஆணையர், சென்னை–3.
கோவை/மதுரை/திருநெல்வேலி/சேலம்.
மாநிலக் கணக்காயர், சென்னை–18
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–5/18/35/79.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
அனைத்து மாவட்டக் கருவூல அலுவலர்கள்.
**நகல்:**
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9
பள்ளிக் கல்வித் துறையின் கீழ் உள்ள அனைத்து துறைத் தலைவர்கள்,
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
நிதித் (கல்வி–II) / (வரவு செலவு பொது I & II) /CMPC) துறை, சென்னை–9
திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை,சென்னை–9
பள்ளிக் கல்வித் (வரவு–செலவு) துறை, சென்னை–9.
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9
நிதி அமைச்சரின் அலுவலகம், சென்னை 9
பள்ளிக் கல்வித் துறை அமைச்சரின் அலுவலகம், சென்னை–9
முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை, சென்னை–9.
பள்ளிக் கல்வித் துறையின் அனைத்துப் பிரிவுகள், சென்னை–9.

**/ஆணைப்படி / அனுப்பப்படுகிறது/**

பிரிவு அலுவலர்
8/6/12

அரசாணை(நிலை)எண்.137, பள்ளிக்கல்வி(மேநிக2)த்துறை, நாள்.08.06.2012.

**இணைப்பு**

**2012–2013ம் கல்வி ஆண்டில் உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்படும் உயர்நிலைப் பள்ளிகளின் பட்டியல்.**

| வ.எண் | பள்ளியின் பெயர் மற்றும் இருப்பிடம் | மாவட்டம் |
|---|---|---|
| 1. | அரசு உயர்நிலைப்பள்ளி, இனாம் மாத்தூர் | திருச்சி |
| 2. | அரசு உயர்நிலைப்பள்ளி, கன்னுடையான்பட்டி | திருச்சி |
| 3. | அரசு உயர்நிலைப்பள்ளி, காட்டுப்புத்தூர் | திருச்சி |
| 4. | அரசு உயர்நிலைப்பள்ளி, பைத்தம்பாறை | திருச்சி |
| 5. | அரசு உயர்நிலைப்பள்ளி, திருப்பஞ்சீலி | திருச்சி |
| 6. | அரசு உயர்நிலைப்பள்ளி, ஊத்துக்குளி | திருச்சி |
| 7. | அரசு உயர்நிலைப்பள்ளி, தி.முருங்கப்பட்டி | திருச்சி |
| 8. | அரசு உயர்நிலைப்பள்ளி, ஆமூர் | திருச்சி |
| 9. | அரசு உயர்நிலைப்பள்ளி, ஜெ.சுத்தமல்லி | அரியலூர் |
| 10. | அரசு உயர்நிலைப்பள்ளி, கஞ்சம்பட்டி | கோயம்புத்தூர் |
| 11. | அரசு உயர்நிலைப்பள்ளி, எஸ்.புங்கம்பாளையம், | கோயம்புத்தூர் |
| 12. | அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளி, சிங்காநல்லூர், | கோயம்புத்தூர் |
| 13. | அரசு உயர்நிலைப்பள்ளி, பெரிய காட்டுப்பாளையம் | கடலூர் |
| 14. | அரசு உயர்நிலைப்பள்ளி, வடலூர் புதுநகர் | கடலூர் |
| 15. | அரசு உயர்நிலைப்பள்ளி, கன்னிப்பட்டி | தர்மபுரி |
| 16. | அரசு உயர்நிலைப்பள்ளி, மன்னவனூர் | திண்டுக்கல் |
| 17. | அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளி, வடமதுரை | திண்டுக்கல் |
| 18. | அரசு உயர்நிலைப்பள்ளி, பாவக்கல் | கிருஷ்ணகிரி |
| 19. | அரசு உயர்நிலைப்பள்ளி, கண்ணண்டஅள்ளி | கிருஷ்ணகிரி |
| 20. | அரசு உயர்நிலைப்பள்ளி, தாசப்ப கவுண்டன் புதூர் | ஈரோடு |
| 21. | அரசு உயர்நிலைப்பள்ளி, நெருஞ்சிப்பேட்டை | ஈரோடு |
| 22. | அரசு உயர்நிலைப்பள்ளி, பசுவப்பட்டி | ஈரோடு |
| 23. | நகராட்சி உயர்நிலைப்பள்ளி, மொடச்சூர் | ஈரோடு |
| 24. | அரசு உயர்நிலைப்பள்ளி, 101 ஜமீன் தண்டலம் | காஞ்சிபுரம் |
| 25. | அரசு உயர்நிலைப்பள்ளி, வேடந்தாங்கல் | காஞ்சிபுரம் |
| 26. | அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி, செய்யூர் | காஞ்சிபுரம் |
| 27. | அரசு உயர்நிலைப்பள்ளி, பரந்தூர் | காஞ்சிபுரம் |
| 28. | அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளி, படப்பை | காஞ்சிபுரம் |
| 29. | அரசு உயர்நிலைப்பள்ளி, நெய்யாடுபாக்கம் | காஞ்சிபுரம் |
| 30. | அரசு உயர்நிலைப்பள்ளி, மண்மங்கலம் | கரூர் |
| 31. | அரசு உயர்நிலைப்பள்ளி, ஜி.உடையார்பட்டி | கரூர் |
| 32. | அரசு உயர்நிலைப்பள்ளி, ஜெகதாபி | கரூர் |
| 33. | அரசு உயர்நிலைப்பள்ளி, தெற்குத்தெரு மேலூர் | மதுரை |

| | | |
|---|---|---|
| 34. | பாண்டியன் நெடுஞ்செழியன் மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி, மதுரை (வடக்கு) | மதுரை |
| 35. | அரசு உயர்நிலைப்பள்ளி, தும்பைப்பட்டி | மதுரை |
| 36. | அரசு உயர்நிலைப்பள்ளி, முள்ளிபள்ளம் | மதுரை |
| 37. | அரசு உயர்நிலைப்பள்ளி, முட்டம் | நாகப்பட்டினம் |
| 38. | அரசு உயர்நிலைப் பள்ளி,குள்ளநாயக்கன் பாளையம் | நாமக்கல் |
| 39. | அரசு உயர்நிலைப்பள்ளி, உடையார்பாளையம் | நாமக்கல் |
| 40. | அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளி, பாண்டமங்கலம் | நாமக்கல் |
| 41. | அரசு உயர்நிலைப்பள்ளி, கோனூர் | நாமக்கல் |
| 42. | அரசு உயர்நிலைப்பள்ளி, மித்ராவயல் | சிவகங்கை |
| 43. | அரசு உயர்நிலைப்பள்ளி, முனைவென்றி | சிவகங்கை |
| 44. | அரசு உயர்நிலைப்பள்ளி, மாங்குடி | சிவகங்கை |
| 45. | அரசு உயர்நிலைப்பள்ளி, கைகளத்தூர் | பெரம்பலூர் |
| 46. | அரசு உயர்நிலைப்பள்ளி, புலியூர் | புதுக்கோட்டை |
| 47. | அரசு உயர்நிலைப்பள்ளி, ஒடுகம்பட்டி | புதுக்கோட்டை |
| 48. | அரசு உயர்நிலைப்பள்ளி, மண்டையூர் | புதுக்கோட்டை |
| 49. | அரசு உயர்நிலைப்பள்ளி, கோபாலபட்டினம் | புதுக்கோட்டை |
| 50. | அரசு உயர்நிலைப்பள்ளி, செவல்பட்டி | புதுக்கோட்டை |
| 51. | அரசு உயர்நிலைப்பள்ளி, காமன்கோட்டை | இராமநாதபுரம் |
| 52. | அரசு உயர்நிலைப்பள்ளி, கமுதிகோட்டை மேடு | இராமநாதபுரம் |
| 53. | அரசு உயர்நிலைப்பள்ளி, பாம்பன் | இராமநாதபுரம் |
| 54. | அரசு உயர்நிலைப்பள்ளி, சவுரியூர் | சேலம் |
| 55. | அரசு உயர்நிலைப்பள்ளி, நெய்க்காரப்பட்டி | சேலம் |
| 56. | அரசு உயர்நிலைப்பள்ளி, வளசையூர் | சேலம் |
| 57. | அரசு உயர்நிலைப்பள்ளி, நட்டுவம்பாளையம் | சேலம் |
| 58. | அரசு உயர்நிலைப்பள்ளி, பனங்காட்டூர் | சேலம் |
| 59. | அரசு உயர்நிலைப்பள்ளி, வட இலுப்பை | திருவண்ணாமலை |
| 60. | அரசு உயர்நிலைப்பள்ளி, இனாம்காரியந்தல் | திருவண்ணாமலை |
| 61. | அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளி, பெரணமல்லூர் | திருவண்ணாமலை |
| 62. | அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளி, காஞ்சி | திருவண்ணாமலை |
| 63. | அரசு உயர்நிலைப்பள்ளி, அத்திமூர் | திருவண்ணாமலை |
| 64. | அரசு உயர்நிலைப்பள்ளி, திருக்கருகாவூர் | தஞ்சாவூர் |
| 65. | அரசு உயர்நிலைப்பள்ளி, ஆலக்குடி | தஞ்சாவூர் |
| 66. | நகராட்சி உயர்நிலைப்பள்ளி, தஞ்சாவூர் | தஞ்சாவூர் |
| 67. | அரசு உயர்நிலைப்பள்ளி, முருக்கோடை | தேனி |
| 68. | அரசு உயர்நிலைப்பள்ளி, சாமி கவுண்டன் பாளையம் | திருப்பூர் |
| 69. | அரசு உயர்நிலைப்பள்ளி, அலங்கியம் | திருப்பூர் |
| 70. | அரசு உயர்நிலைப்பள்ளி, உடுக்கம்பாளையம் | திருப்பூர் |
| 71. | அரசு உயர்நிலைப்பள்ளி, ஆற்காடுகுப்பம் | திருவள்ளூர் |
| 72. | அரசு உயர்நிலைப்பள்ளி, அலமாதி | திருவள்ளூர் |
| 73. | அரசு உயர்நிலைப்பள்ளி, சத்தியமூர்த்தி நகர் | திருவள்ளூர் |
| 74. | அரசு உயர்நிலைப்பள்ளி, காட்டூர் | திருவள்ளூர் |
| 75. | அரசு உயர்நிலைப்பள்ளி, எறவஞ்சேரி | திருவாரூர் |
| 76. | அரசு உயர்நிலைப்பள்ளி, முனைஞ்சிப்பட்டி | திருநெல்வேலி |

| | | |
|---|---|---|
| 77. | அரசு உயர்நிலைப்பள்ளி, பிள்ளையார்நத்தம் | திருநெல்வேலி |
| 78. | அரசு உயர்நிலைப்பள்ளி, சாயமலை | திருநெல்வேலி |
| 79. | அரசு உயர்நிலைப்பள்ளி, சுத்தமல்லி | திருநெல்வேலி |
| 80. | நகராட்சி உயர்நிலைப்பள்ளி, சாமுவேல்புரம் | தூத்துக்குடி |
| 81. | அரசு உயர்நிலைப்பள்ளி, பூதலாபுரம் | தூத்துக்குடி |
| 82. | அரசு உயர்நிலைப்பள்ளி, கீழப்பூவானி | தூத்துக்குடி |
| 83. | அரசு உயர்நிலைப்பள்ளி, சிவகளை | தூத்துக்குடி |
| 84. | அரசு உயர்நிலைப்பள்ளி, ஊத்துப்பட்டி | தூத்துக்குடி |
| 85. | அரசு உயர்நிலைப்பள்ளி, சோரிஸ்புரம் | தூத்துக்குடி |
| 86. | அரசு உயர்நிலைப்பள்ளி, பூண்டி | வேலூர் |
| 87. | அரசு உயர்நிலைப்பள்ளி, பெரியகண்ணாலப்பட்டி | வேலூர் |
| 88. | அரசு உயர்நிலைப்பள்ளி, வக்கனம்பட்டி | வேலூர் |
| 89. | அரசு உயர்நிலைப்பள்ளி, கும்பினிப்பேட்டை | வேலூர் |
| 90. | அரசு உயர்நிலைப்பள்ளி, குடியாத்தம் (RS) | வேலூர் |
| 91. | அரசு உயர்நிலைப்பள்ளி, ராமநாயக்கன்பேட்டை | வேலூர் |
| 92. | அரசு உயர்நிலைப்பள்ளி, விராட்டிக்குப்பம் | விழுப்புரம் |
| 93. | அரசு உயர்நிலைப்பள்ளி, சோமான்டார்குடி | விழுப்புரம் |
| 94. | அரசு உயர்நிலைப்பள்ளி, ஆசனூர் | விழுப்புரம் |
| 95. | அரசு உயர்நிலைப்பள்ளி, குதிரைச்சந்தல் | விழுப்புரம் |
| 96. | அரசு உயர்நிலைப்பள்ளி, நடுக்குப்பம் | விழுப்புரம் |
| 97. | அரசு உயர்நிலைப்பள்ளி, சிவலிங்கபுரம் | விருதுநகர் |
| 98. | அரசு உயர்நிலைப்பள்ளி, மெட்டுக்குண்டு | விருதுநகர் |
| 99. | அரசு உயர்நிலைப்பள்ளி, நல்லம்மநாயக்கன்பட்டி | விருதுநகர் |
| 100. | அரசு உயர்நிலைப்பள்ளி, மேலக்காந்தி நகர் (சாத்தூர் நகரம்) | விருதுநகர் |

**த.சபிதா**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

**// உண்மை நகல்//**

பிரிவு அலுவலர்.